**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 89/2017 | வா.சா. | : 1 |
| பெயர் | : ராமலிங்கம் | த/பெ. | : பூசாரி |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : விளாம்பட்டி |
| தேதி | : 21.08.2023 | வயது | : 41/2023 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

2) நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பற்றிய விபரம் எனக்கு தெரியும். பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சேபணை பற்றிய விபரமும் எனக்கு தெரியும். பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை ஆட்சேபித்து நான் பதில் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பற்றி எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் அசல் ஆவணம் என்ன ஆனது என்றால் காணாமல் போய்விட்டது. எனது வழக்குரையில் அசல் ஆவணம் காணாமல் போய்விட்டதாக நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் அசல் ஆவணம் தொலைந்துவிட்டது என்று வழக்குரையில் குறிப்பிடாமல் தற்போது எனது சாட்சியத்தில் ஆவணம் தொலைந்துவிட்டதாக முதல் முறையாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல.

3) கிரைய ஆவணம் தொலைந்தது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அங்குக் கொடுக்கப்பட்ட ரசீதை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வீட்டில் வைத்துள்ளேன். என் அப்பா வழக்குச் சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பாக வில்லங்கம் போட்டுப்பார்த்து சொத்தை கிரையம் வாங்கினார் என்பதை காண்பிக்கக்கூடிய வில்லங்கச் சான்றிதழை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. என் அப்பா வழக்குச் சொத்தை கிரையம் வாங்குவதற்கு

முன்பாக முன் உரிமையாளர்கள் வழக்குச் சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் எதையும் நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் வீட்டுவரி ரசீது மற்றும் மின்இணைப்பு ரசீது தாக்கல் செய்துள்ளேன். பட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4) என் அப்பாவிற்கு வழக்குச் சொத்தை கிரையம் கொடுத்தவருக்கு வழக்குச் சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்கக்கூடிய வழக்குச் சொத்தின் மூல ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் நான்கு எல்லை போடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ–1 கிரைய ஆவணத்தில் நான்கு எல்லை போடப்படவில்லை நாங்களாகவே வழக்குரையில் நான்கு எல்லை போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு எல்லைக்கு ஆதரவாக நான் எந்த ஆவணத்தையும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன்.

5) வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் மூன்றில் ஒரு பங்கை கிரையம் கொடுப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. மூன்றில் ஒரு பாகம் எந்த இடத்தில் உள்ளது அதற்கான பட்டா ஆகியவை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரி. வழக்குச் சொத்து விபரத்தில் நிலஅளவை எண் உட்பிரிவு செய்யப்படாமல் உள்ளது என்றால் சரியல்ல. புல எண்.130/2 ல் நடுப்பகுதியில் வழக்குச் சொத்து உள்ளது. புல எண். 130/2 உட்பிரிவு செய்யப்பட்டுவிட்டதா என்றால் உட்பிரிவு ஆகிவிட்டது அவை பக்கத்தில் உள்ள சொத்துக்களாகும். புல எண். 130/2 உட்பிரிவு செய்யப்பட்டிருந்தால் அது 130/2A, 2B போன்று உட்பிரிவு செய்யப்பட்டிருக்கும். ஆனால், அவ்வாறு எதுவும் உட்பிரிவு செய்யப்படவில்லை, நான் விபரம் தெரியாமல் உட்பிரிவு செய்யப்பட்டுவிட்டதாக சொல்கிறேன் என்றால் இல்லை.

6) வழக்குச் சொத்தை கிரையம் பெற்ற பிறகு என் அப்பா அனுபவித்து வந்தார் என்பதை காட்டக்கூடிய அவர் பெயரிலுள்ள அடங்கல், பட்டா போன்ற வருவாய் ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. என் அப்பா இறந்த பின்னிட்டு வழக்குச் சொத்தை நான் அனுபவித்து வருகிறேன் என்பதை காட்டக்கூடிய எனது பெயரிலுள்ள பட்டா, அடங்கல் போன்ற ஆவணங்களை வழக்கு தாக்கல் செய்யும்போது நான் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை, வீட்டுவரி ரசீது மற்றும் மின் இணைப்பு ரசீது மட்டும் போட்டுள்ளேன். எனது அப்பா 1990 ல் இறந்தார் என்பதை காட்டக்கூடிய இறப்புச் சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. அந்த ஆவணம் தொலைந்துவிட்டது.

7) வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்திலும் நான்கு எல்லை சொல்லப்படவில்லை என்றால் சரி. வழக்குச் சொத்தை 07.05.1973 ல் பெத்தாயி அம்மாள் என்பவர் பழனி என்பவரிடமிருந்து ரூ.3200 க்கு கிரையம் பெற்றுள்ளது தெரியுமா என்றால் தெரியாது. அந்த கிரைய ஆவணத்தில் பழனிக்கு சொத்து எவ்வாறு பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. பெத்தாயி அம்மாள் கிரைய ஆவணத்தில் கிரையச் சொத்தின் நிலஅளவை எண் மற்றும் நான்கு எல்லைகள் சொல்லப்பட்டுள்ளது குறித்து பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால், அது பெத்தாயிஅம்மாள் சொத்து தான், அது பக்கத்தில் உள்ள சொத்தாகும்.

8) பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 13.12.2002 தேதியிட்ட 1ம் பிரதிவாதியின் தாயாரான பெத்தாயிஅம்மாள் பெயரில் ரூ.4500 க்கு கிரைய ஆவணம் ஏற்பட்டுள்ளது அதன்படி அந்த கிரைய சொத்திற்கு புல எண்.130/2G என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது அதன் பட்டா எண். 1006 என்று பெத்தாயி அம்மாள் பெயரில் ஏற்பட்டுள்ளது என்றால் சரி. அது என் அம்மாவின் அம்மா சொத்தாகும். பெத்தாயிஅம்மாள் உயிருடன் இருக்கும்போதே, வழக்குச் சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதி பெயருக்கு பாகப்பிரிவினை செய்து எழுதிக்கொடுத்த விபரம்

தெரியுமா என்றால் தெரியும், ஆனால் அது மோசடியாக எழுதப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி வழக்குச் சொத்தை மோசடியாக எழுதி வாங்கிக்கொண்டார் என்று அவர் மீது தனியாக வழக்கு எதுவும் போட்டுள்ளேனா என்றால் இல்லை, இனிமேல் தான் போடனும்.

9) பெத்தாயிஅம்மாள் தன்னுடைய தனிப்பட்ட சொத்தை தன் மகளுக்கு எழுதிக்கொடுத்ததைப் பற்றி ஆட்சேபணை செய்ய எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தில் கிணற்றிற்கான மின்இணைப்பு எண்.38 என்று பெத்தாயிஅம்மாள் பெயரிலுள்ளது என்றால் சரி. அது என் அம்மாவிற்கும் பாத்தியப்பட்டதாகும். பெத்தாயிஅம்மாள் பெயரிலிருந்த மின்இணைப்பு எண் தற்போது 1ம் பிரதிவாதி பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு அவர் பெயரில் இருந்து வருகிறது என்றால் சரி, அதில் என் அம்மா மாயம்மாளுக்கும் பாத்தியம் உள்ளது. என் அப்பா பூசாரியின் தந்தை பெயர் ராமசாமி என்றால் சரி. என் அப்பா பூசாரி வழக்குச் சொத்தை பிச்சையனம்பலம் மகள் பொன்னம்மாளிடம் கிரையம் வாங்கினார் என்று நான் சொல்கிறேன் என்றால் ஆமாம்.

10) வழக்குச் சொத்து ராமசாமியின் மகன்கள் நாச்சான், லெட்சுமணன், ராமன் ஆகியோர்களுக்க பாத்தியப்பட்டது அவர்கள் மீது பெத்தாயிஅம்மாள் மேலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.60/1976 என்ற வழக்கை தாக்கல் செய்து அதன் பெயரில் 26.08.1976ல் பெத்தாயிஅம்மாளுக்கு ஆதரவாக தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ஏற்பட்டுள்ளது. அவை பிரதிவாதிகள் தரப்பில் வரிசை எண் 3 ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது வழக்குச் சொத்திற்கு பக்கத்திலுள்ள சொத்துக்களை பொறுத்தது ஆகும். வழக்குச் சொத்திற்கு அருகிலுள்ள சொத்துதான் மேற்கண்ட சொத்து என்பதை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் தரப்பில் வரிசை எண்.4 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள மேலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.60/1976 இடைநிலை மனு எண். 255/1976ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு பற்றி தெரியுமா என்றால் தெரியாது.

11) அதன் பின்னிட்டு அ.வ.எண். 60/1976 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக பூசாரி, ராமசாமி, நாச்சான், லெட்சுமணன், ராமன் ஆகியோர் பிரச்சினை செய்ததால் அவர்களை சிவில் ஜெயிலில் அடைக்க நிறைவேற்று மனு எண்.237/1992 மனு தாக்கல் செய்யப்பட்டு அதனடிப்படையில் மேற்படி நபர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிர்மனுதாரர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்ற அடிப்படையில் நிறைவேற்று மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 01.01.1987 முதல் 20.11.2012 வரையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வில்லங்க சான்றிதழலில் எனது அப்பா பெயரோ, எனது பெயரோ, என் அம்மா பெயரோ இடம் பெறவில்லை என்றால் சரி.

12) 1ம் பிரதிவாதியின் கணவர் நல்லியப்பன் வழக்குச் சொத்தைப் பொறுத்து 15.09.1993 அன்று 1ம் பிரதிவாதியை காப்பாளராக காண்பித்து 2, 3 பிரதிவாதிகள் பெயரில் தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளார் என்றால் அந்த ஆவணம் பக்கத்திலுள்ள சொத்தைப் பொறுத்ததாகும், அதில் என் அப்பாவிற்கும் உரிமையுள்ளது. அதில் என் அப்பாவிற்கு உரிமையுள்ளது என்பதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அது என் தாத்தா ராமசாமி பெயரிலுள்ளது. அவர் பெயரிலுள்ள ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நல்லியப்பன் பெயரில் வழக்குச் சொத்து பொறுத்து ஏற்பட்டுள்ள பட்டாவை ஆட்சேபித்து நான் வருவாய்துறையில் மனு எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

13) வழக்குச் சொத்து சம்பந்தமாக பெத்தாயிஅம்மாளின் கிரையதாரரான வெள்ளையம்மாள் பெயரிலுள்ள பட்டாவை ஆட்சேபித்து நான் மனு எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. வழக்குச் சொத்து சம்பந்தமாக இந்த

நீதிமன்றத்தில் அ.வ.எண்.31/2013 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதில் வழக்குச் சொத்து 1ம் பிரதிவாதிக்கு ஏற்பட்டுள்ளது என்றால் அது பொய் வழக்காகும். அதில் என் அம்மாவிற்கும் பாகம் உள்ளது. அந்த வழக்கில் என் தாயார் நீதிமன்றத்தில் முன்னிலையாகி சாட்சியமளித்து அதனடிப்படையில் தான் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது தற்போது அதை மறுத்து அதற்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு தீர்ப்பானதிலிருந்து 3 வருடத்திற்குள் நான் தனியாக வழக்கு தாக்கல் செய்திருக்கவேண்டும், அவ்வாறு இல்லாத நிலையில் தற்போது மேற்படி வழக்கின் தீர்ப்பிற்கு எதிராக பேச எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல, உரிமையுள்ளது.

14) வழக்குச் சொத்தில் தற்போது வரை 1ம் பிரதிவாதி தான் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்பதை காட்டக்கூடிய 1ம் பிரதிவாதி பெயரிலுள்ள அடங்கல் மற்றும் கிஸ்தி ரசீதுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது, அதனை ஆட்சேபித்து வருவாய்துறையில் மனு எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பெத்தாயிஅம்மாளின் வாரிசு சான்றிதழ் மீது ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை. நான் வழக்குச் சொத்தில் பிரச்சினை செய்ததால் 1 முதல் 3 பிரதிவாதிகள் என் மீது நத்தம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படாததால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் மனு தாக்கல் செய்து என் மீது வழக்கு பதிவு செய்ய உத்தரவு பெற்றுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

15) வழக்குச் சொத்து பெத்தாயிஅம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்று நான் இவ்வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. பெத்தாயிஅம்மாள் சொத்து பக்கத்திலுள்ள சொத்தாகும். வழக்குச் சொத்து பெத்தாயிஅம்மாளுக்கு பாத்தியப்பட்டதாகும். அது பொன்னம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டக்கூடிய மூல ஆவணங்கள் மற்றும் வருவாய் ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல்

செய்யாததால் என் வழக்கு பொய்யானது என்றும், அதனை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 கிஸ்தி ரசீதில் பட்டா எண். 1006 என்று போடப்பட்டுள்ளது என்றால் சரி. பட்டா எண். 1006 பெத்தாயிஅம்மாள் பெயரிலிருந்து 1ம் பிரதிவாதி பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது என்றால் அது என் அம்மாவின் அம்மா பெத்தாயி அம்மாள் சொத்து தான்.

16) நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்குச் சொத்து மீதுள்ள எனது அனுபவத்தை காட்டக்கூடியதாக இல்லை என்றால் சரியல்ல, அது என் தாயார் பெயரிலுள்ளது. வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.7, மின்கட்டண ரசீதானது 1ம் பிரதிவாதி பெயரிலுள்ள மின் இணைப்பிற்கு எனது பெயரில் மின் கட்டணம் செலுத்தி போலியாக நான் அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தில் நான் வீடுகட்டி குடியிருக்கிறேன் என்பதை காட்டக்கூடிய ரசீதுகள் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் வழக்கு சொத்து எனது தனிப்பட்ட அனுபவத்தில் இருந்தது என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யாததால் நான் கோரியுள்ள விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

17) நான் தாக்கல் செய்துள்ள வீட்டுவரி ரசீதுகள் ஊருக்குள் உள்ள வீட்டிற்கானதாகும். வழக்குச் சொத்திலுள்ள வீட்டில் நான் குடியிருப்பதை காண்பிக்கக் கூடிய ரசீதுகளை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வீட்டுவரி ரசீதுகளை ஊராட்சிமன்ற தலைவர் சொத்தின் உரிமையாளரை முறையாக விசாரணை செய்யாமல் வரிவிதிப்பு செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வீட்டுவரி விதிப்பு பிரதிவாதிகளை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது

என்று சொன்னால் சரியல்ல. நான் என் வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகளை நிரூபிக்கும் வகையில் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யாததால் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 21.08.2023 கையெழுத்து செய்துள்ளார்.

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.